# 1
# நல்ல இதயங்கள்



அரசன் அரியணையில் வீற்றிருந்தான்.

அங்கு வந்த பெரியவர் ஒருவர் அரசனிடம் சிறு கிண்ணம் ஒன்றைத் தந்தார். "அரசே! இதற்குள் அமுதம் உள்ளது. ஒருவர் மட்டும் உண்ணலாம். தங்களுக்காக அரும்பாடுபட்டுக் கொண்டுவந்திருக்கிறேன். இதை நீங்கள் உண்டால் இறப்பின்றி நீண்ட காலம் உயிர்வாழலாம்" என்றார் அவர்.

அங்கு இருந்தவர்களைப் பார்த்து அரசன், "நான் இதை உண்ணலாமா?" என்று கேட்டான்.

"அரசே! உண்ணுங்கள். நீங்கள் நீண்ட காலம் உயிர் வாழ்வது நம் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் நல்லது" என்று எல்லோரும் ஒரே குரல் கூறினர்.

இதைக் கேட்ட அரசன் மகிழ்ச்சி அடைந்தான். தான் ஆசையாக வளர்த்து வந்த கிளியைப் பார்த்து "நான் இதைச் சாப்பிடலாமா? வேண்டாமா?" என்று கேட்டான்.



அதற்குக் கிளி, "அரசே! எனக்கு மட்டும் இந்த அமுதம் கிடைத்தால் நான் உண்ணவே மாட்டேன். எல்லோருக்கும் கிடைத்து எனக்கும் கிடைத்தால் தான் நான் உண்ணுவேன்" என்றது.

கிளியின் சொற்களில் உள்ள உண்மை அறிந்த அரசன், தனக்குக் கிடைத்த அமுதத்தை வேண்டாம் என்று தூக்கி எறிந்தான்.

- கிளியின் சொற்களிலுள்ள உண்மையை, கதையை வாசித்துக் குறிப்பிடுங்கள்.
- அமுதத்தைத் தூக்கி ஏறிந்த அரசன் அமுதம் கொடுத்த பெரியவரிடம் என்ன கூறியிருப்பான்?

# மனித நேயம்

அகந்தை அற்ற நல்மனம்
அறம் நிறைந்த பெட்டகம்!
சுகந்தம் வீசும் சொல்மலர்
சொரியும் அன்பு குணநிதி

புகுந்த நெஞ்சில் பொய்மையும்
பொசுங்கும் தூய்மை ஒளியினால்
தகுந்த பண்பு இதற்கெலாம்
தாய்மை மனித நேயமே!

ஈரம் பொழியும் இதயமே
இறைவன் உறையும் ஆலயம்!
வீரம் சிரிக்கும் விழிகளில்
வீசும் மங்காப் புகழொளி!

தீரம் திகழும் நற்செயல்
தேக்கம் நீக்கும் பொற்கதிர்!
நேரம் தழுவும் நிகழ்ச்சிகள்
நேர்மை வாழ்வின் வளர்பிறை!

மனதில் பூக்கும் சிந்தனை
மணம் கொழிக்கும் செய்வினை!
புனிதப் பூந்தேன் சுவைத்திட
புதுமைப் பேழை திறந்திடும்!

தனது ஆர்வப் பெருக்கிலே
தகைமை சிறக்கும் ஆற்றலால்
மனித நேய ஆக்கமே
மாண்பு வாழ்வின் சுடரொளி!

**கவிமாமணி பி. குமரேசன்**

## செயல்பாடுகள்

- பாடலை இசையோடு பாடுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
- மனிதநேயப் பண்புகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை விளக்கும் கவிதை வரிகளைக் கூறுங்கள்.
- இக்கவிதையைப் போன்று மனித நேயத்தை விளக்கும் பிற கவிதைகளைத் திரட்டுங்கள்; வகுப்பில் வெளியிடுங்கள்.

# என்று தணியும் இந்தத் தாகம்?

“பொதுமக்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தன் கடமையைச் செய்யத் தயங்கக் கூடாது. தன் உரிமையைக் கேட்டுப் பெற மயங்கவும் கூடாது. நம் அபிராமி நகரை எடுத்துக் கொள்ளுங் கள். அடிப்படை வசதிகள் ஏதாவது இருக்கிறதா? நாம் இந்த நகராட்சியிடம் என்ன கேட்கிறோம்? வயிற்றுக்குச் சோறும், உடம்புக்குத் துணியுமா கேட்கிறோம்? நடந்து போக நல்ல சாலை கொடு! ராத்திரியானால் திருட்டும், கொள்ளையுமா இருக்கு, சரியான லைட் வசதி பண்ணிக்கொடு! குடிக்கத் தண்ணி விடு! கழிவுநீர்த் தண்ணியெல்லாம் தெருவுல வழிஞ்சு கொசு பெருகிக் கிடக்கு..”

தொடர்ந்து ஆவேசமாக, கழுத்து நரம்புகள் புடைக்க நிஜமான ஆதங்கத் தோடு, மக்களையெல்லாம் ஒரே சமயம் அநீதிகளுக்கெதிராக – அக்கிரமங்க ளுக்கெதிராகத் தட்டியெழுப்பி விட வேண்டும் என்ற உத்வேகத்தோடு மைக் கில் பேசிக் கொண்டிருக்கும் நாராயணனுக்குக் கிட்டத்தட்ட எழுபதைத் தாண்டு கிற வயது.

எல்லாரும் அலுவலகம் விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த அந்த மாலை வேளையில், நகரின் முனையில் சாலையின் ஓரம், ஒற்றை மைக்கை வைத்து அவர் பேசிய பேச்சு அனைவரையும் ஈர்த்து நிறுத் தியது.



ஏன் அடிப்படை வசதி களைக்கூட இழந்து நிற்கி றோம். யார் இதற்குக் கார ணம்? அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்கு விளங்கத் தொடங் கியது.

தொடர்ந்து, நாராயணனின் வார்த்தைகள் அதே வீச்சில் விழுந்துகொண்டி ருந்தன?

"அக்கிரமங்களை எதிர்த்துக் குரல் கொடுக்க, அனைத்து நலச்சங்கங்கள், நகரவாசிகளெல்லாம் நாளை நடக்கும் போராட்டத்தில் பங்கெடுக்க வாருங்கள்..!' என்றார்.

கூடியிருந்த நூற்றுக்கணக்கான பேர்கள் கைதட்டிவிட்டுப் போகாமல், கைகளை உயர்த்தி "வருகிறோம்" என்றார்கள்.

ராத்திரி பதினொன்றாகியும் நாராயணன் தூங்கவில்லை. தன் அறையில் உட்கார்ந்து பழைய டிரங்க் பெட்டிகளைக் குடைந்துகொண்டிருந்தார்.

நாராயணனின் மனைவி சிவகாமி அறைக்குள் நுழைந்தாள். கண்பார்வை சுத்த மங்கல் அந்தம்மாளுக்கு. சுவரைத் தடவியபடித் தான் அங்கு வந்தாள்.

புருஷன் தூங்காமல், கரமுரவெனப் பிராண்டிக் கொண்டிருப்பதைக் கேட்டுப் படுக்கையி ருந்து எழுந்து வந்திருந்தாள்.

"என்ன தேடறீங்க?"

"போன மாதம் சிஎம். முக்கு லெட்டர் எழுதியிருந்தேன். நம்ம அபிராமி நகரையொட்டிப் போற ஜி.எஸ்.டி. ரோட்ல தினமும் நாலு விபத்துகள் நடக் கறது. அங்கே ஃப்ளைஓவர் அவசியம் வேணும்னு எழுதியிருந்தேன். ப்ரபோ சல்ல இருக்கிறதா பதில் வந்திச்சு."

"பாருங்க...! உங்களுக்கு வயசாயிட்டுது. அக்காடானு திண்ணைல உட் கார்ந்து பேரப்புள்ளைகளைக் கொஞ்சிண்டிருக்க வேண்டியதுதானே? ஏன், லோலோன்னு கிடந்து அல்லாடறீங்க? இந்த வயசுலயும் ஊர் பொல்லாப்பு வேணுமா? நாடோடிகளைவிட மோசமா ஒரு இடத்துல ஆறு மாசம், ஒரு வருஷம்னு மாறி மாறி வந்திருக்கோம். இங்கதான் ஸ்திரமா ரெண்டு வருஷம் இருக்கோம். ஏதோ பிள்ளைகளுக்கும் வேலை கிடைச்சுது. வத்தல், வடாம், பொடி ரகம், லேகியம்னு வீட்டோட நாம் பண்ற தொழிலும் விருத்தியடைஞ்சி ருக்கு, ரொம்ப நாளைக்கப்புறம் குடும்பத்துல நிம்மதி எட்டியிருக்கு. பிடிக்க லையா உமக்கு?"

“என்னடி சொல்றே காமு?”

“இங்கேயும் ஏதாவது வம்பு பண்ணி எங்களை இம்சை பண்ணினால், இது வரை பண்ணாப்ல ஒவ்வொரு ஏரியாவா வீட்டை மாத்திட்டிருக்க மாட்டோம். அப்பாவைக் கொண்டுபோய் முதியோர் இல்லத்துல தள்ளிடுவோம்னு மூத்தவன் பேசறான்.”

அன்றிரவு கரண்ட் இல்லாமல், கொசுக் கடியில் யாராலும் தூங்க முடியாமல் போனது. நாராயணனின் தேடலும் பாதியிலேயே நின்றது. குழந்தைகளின் சிணுங்கல் சத்தம் கேட்டபடி, யோசித்துக் கொண்டிருந்தார்.

அதிகாலையில், மூத்த மருமகள் குரல் கொடுத்தாள்.

“இதென்ன அநியாயம்? பக்கத்து வீட்டுக் குழாய்ல தண்ணீர் வருது. இந்த வீட்டுக் குழாய்ல மட்டும் தண்ணி வரலையே?” என்றாள்.



தொடர்ந்து பல நாட்கள் அந்த அதிசயம் நடந்தது. நாராயணனின் வீட்டுக்கு மட்டும் கரண்ட் வரவில்லை; தண்ணீர் வரவில்லை.

அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் நாராயணனை ஏறிட்டு, “கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுங்க, ஆக்ஷன் எடுக்கறோம்..” என்றார். இயந்திரத்தனமான வார்த்தைகள்! நாராயணன் கைப்பையைப் பிரித்து ஒரு கவர் எடுத்து நீட்டினார்.

“கம்ப்ளெய்ண்ட் எழுதியே கொண்டு வந்துட்டேன். கடந்த ஒரு மாசமா நான் படற அவஸ்தை சொல்லி மாளாது. யாரோ வேணுமின்னே என் வீட்டுக்கு வர்ர தண்ணிக் குழாயை உடைச்சுடறாங்க. கரண்ட் கேபிளைக் கட் பண்ணிடறாங்க. கரண்ட் ஆபீஸுக்கும், நகராட்சிக்கும் நடையா நடந்ததுதான் மிச்சம்! சொந்தக் காசு போட்டு எத்தனை முறை சரி செய்றது? சொல்லுங்க!”

நாராயணனுக்கு நா தழுதழுத்தது.

"நீங்க யார்மேலேயாவது சந்தேகப்படறீங்களா? "

"யாரைன்னுச் சொல்ல? இந்த ஏரியாவுல எத்தனையோ பேருக்கு எம்மேல் கோபம். "

"சரி... சரி... நான் கவனிச்சுக்கிறேன். போய்ட்டு வாங்க... "

நாராயணன் எழுந்திருந்தார்.

நடந்து கொண்டிருந்தபோது, முதுகுக்குப் பின்னால் ஒரு குரல் கேட்டது.

"பெரியவரே...! சித்த நில்லுங்க.. !".

"யாரது? "

"யாரா இருந்தாலென்ன? கேபிளையும், குழாயையும் உடைச்சது பத்தி கம்ப்ளெய்ண்ட் பண்ணிட்டு வரிங்களா? என்ன பிரயோஜனம்? சும்மாக் கிடந்த தேன் கூட்டில கல்லடிச்சுட்டுக் குப்புறப்படுத்துத் தப்பிக்க முடியுமா?"

"என்ன சொல்றீங்க? "



"இத்தனையும் பண்ணிக்கிட்டிருக்கிறது காண்ட்ராக்டர் பழனிநாதன். அன்னைக்குப் போராட்டம் நடத்தி ஊர்வலம் போய், நகராட்சி முன்னாடி ஆர்ப்பாட்டம் பண்ணி கமிஷனரா பீஸ் ருந்து விஜிலன்ஸாபீஸ் வரைக்கும் கலக்கினீங்களே, என்ன ஆச்சு? பழனிநாதனுக்கு பாஸாயிருக்க வேண்டிய லட்ச ரூபாய் பில்லு போச்சு. சும்மா விடுவானா அவன்? உம்ம நல்லதுக்குத்தான் சொல்றேன். வயதான காலத்துல குறைகள் கண்ணுல பட்டால், மூலையில் உட்கார்ந்து மொட்டை பெட்டிஷன் எழு

திண்டிருங்கோ! அதவிட்டு, சினிமா ஹீரோவாட்டம் நடுத்தெருவுல இறங்கி யென்ன போர்க்கொடி பிடிக்கிறது? ஊருக்கு உதவி பண்றதா நினைச்சிட்டு வீட்டுக்கு உபத்தரவம் பண்ணாதேயும்.”

நாராயணன் பிரமித்து, நின்று விட்டார்.

வெய்யில் அவர் மண்டையைத் தாக்கி நகர வைத்தது. வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது வீடே ஸ்தம்பித்ததுபோல, குடும்பத்தினர் உட்கார்ந்திருந்தார்கள்.

“காமு… என்னாச்சு? ஏன் எல்லோரும் ஒரு மாதிரியிருக்கீங்க? ”

சிவகாமி வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இளைய மருமகள், “கொஞ்சம் முன்னாடி நிறையப்பேர் வந்து ஒரே ரகளை பண்ணிட்டுப் போனாங்க மாமா… ” என்றாள்.

“எதுக்கு? ”

“நம்ம தயாரிக்கிற லேகியம் சாப்பிட்டு ரெண்டு மூணு பெண்களுக்கு வயித்தால போச்சு, வாந்தி, மயக்கம்னு கிடக்கிறாங்கண்ணு யாரோ புரளி கிளப்பி விட்டிருக்காங்க. பெண்கள் கும்பலா வந்து சத்தம் போட்டுட்டுப் போறாங்க..”

“அட கடவுளே! ”

சோர்வாகச் சாய்வு நாற்கா யில் சாய்ந்தவரைக் கடைசிப் பேரப்பிள்ளை முட்டிக்கா ல் தவழ்ந்து வந்து பிடித்துக் கொண்டது. குழந்தையைத் தூக்கி மடியில் இருத்திக் கொண்டார் பெரியவர்.

குழந்தை பொக்கைவாய் காட்டிச் சிரித்தது.

“என்னைப் பார்த்தால் உனக்கும் சிரிப்பா இருக்காடா குழந்தே…”

அது மேலும் சிரித்தது.

“ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பைத்தியம். எனக்கு இந்தப் பைத்தியம். நாயைக் கண்டதும் கல்லெடுத்துத் துரத்தறாப்ல. தப்பா எதைக் கண்டாலும் துரத்தறேன். இப்படித் துரத்தித் துரத்தியே எழுபது வயசுக்கு வந்து சேர்ந்துட்டேன். என் நினைப்பே எனக்கு வந்து தொலைக்க மாட்டேங்குது. என் மேலதிகாரி லஞ்சம் வாங்கினான்னு, அரசாங்க உத்தியோகத்தை உதறினேன். என் அரிச்

சந்திரப் பார்வை பெரிய டிஸ்குவா ஃபிஷேஷன்னு எந்தக் கம்பெனியும் வேலை தரலை எனக்கு. உன் பாட்டிதான் உருட்டி, புரட்டி குடும்பத்தைத் தாங்கிக்கிட்டு வந்தாள். அவளுக்கும் கடைசி வரை நிம்மதி குடுக்கலை. நான் இருக்கிறவரை இந்தக் குடும்பம் உருப்படப் போறதில்லை."

கண்களை மூடினார் நாராயணன்.

கண்ணீர் கட்டுப்பட்டு வெளிப்படவில்லையே தவிர கண்களுக்குள் கலக்கம் இருந்தது.

வாச ல் நிழலாடியது

வீட்டுக்குச் சொந்தக்காரர் அம்பலவாணன் நின்றிருந்தார்.

"நமஸ்காரம். வாங்க... உட்காருங்க...!"

"இருக்கட்டும்.. ஒரு முக்கியமான விஷயமா வந்தேன். நான் ஏற்கனவே சொல் யிருந்தேனே... திருச்சியில் வேலை பார்க்கிற என் சகலை எப்பவேணா மெட்ராஸ் வருவார். வீடு தேவைப்படும்னு... பாருங்க.... உங்க பணம் அட்வான் ஸுன்னு எதுவும் எங்கிட்ட இல்ல. மாசாமாசம் வாடகைத் தரதோட சரி. நமக் குள்ள வேற கண்டிஷன்ஸ் எதுவுமில்லை. அதனால், கா பண்ணமாட்டேன் னு போர்க்கொடி பிடிக்க மாட்டீங்கன்னு நம்பறேன்."

"சேச்சே....,"

"அப்ப நான் வர்ரேன்... சீக்கிரம் கா பண்ணிருங்க..."



மாட்டு வண்டி அபிராமி நகரை விட்டு நகர்ந்துகொண்டிருந்தது. வண்டியில் மூட்டை முடிச்சு சாமான்கள் நிறைந்திருந்தன. அதன்மீது குழந்தைகள் உட்கார்ந் திருந்தன.

வண்டியின் பின்னால் பெரி

யவர் நாராயணன் நடந்து கொண்டிருந்தார்.

தெருவில் பலபேர் வந்து விசாரித்து விட்டார்கள்.

“வீடு கா    பண்ணிட்டீங்களா? சொல்லவேயில்லையே?”

“இருந்தவரைக்கும் இந்த நகர் மக்களுக்காக என்னமா உழைச்சீங்களே! திடீர்னு விட்டுப்போனால் எப்படி? எங்கே போறீங்க? ”

அபிராமி நகருக்கு நாளையி  ருந்து புது ரோடு போடற வேலை ஆரம் பமாம்.

யாரோ சொன்னார்கள்.

புது இடத்துக்கு வந்து பொருந்தி, ஒரு வாரம்போல் ஆகியிருக்கும். வரும் வழியி  ருந்த முதியோர் காப்பகத்தை மகன்கள் சுட்டிக் காட்டியபோது காமு அவர்களைக் கையெடுத்துக் கும்பிட்டு மன்றாடினாள்.

“அனாதையாட்டம் அவரைப் பிடிச்சு அங்கே தள்ளிடாதீங்கடா! நான் அவ ரைக் காப்பாத்திக்கறேன். குழந்தையாட்டம் வீட்டிலேயே கட்டிப் போட்டுட றேன்... ”

“இனி ஒண்ணும் பண்ண மாட்டோம். இனி ஏதாவது குசும்பு பண்ணினார் னா, உங்க ரெண்டு பேரையும் தனிக்குடித்தனம் வைக்கறதைத் தவிர வேற வழி யில்லே ” என்றார்கள்.



மறுவாரத்தில் ஒரு நாள், நாராயணன் திடுதிருப்பென்று வெளியில் கிளம்பினார்.

“எங்க கிளம்பிட்டீங்க? ” மனைவி கேட்டாள்.

“தெரு முனையில் பார்த்தியா? தூர்ந்து போன கிணறு கைப்பிடிச் சுவரும் இல்லாமத் தரைமட்டத்துக்குக் கிடக்கு. குழந்தைகள் விளையாட்டுத்தனமா அந்தப் பக்கம் போய்த் தொலைஞ்சா என்ன கதியாகிறது?இங்கே வெல்ஃபேர் அஸோசியேஷன் எதுனா இருக்கான்னு பார்த்துட்டு அப்படியே டிவிஷனல் ஆபீஸுக்கு ஒரு எட்டு போயிட்டு வர்ரேன். ”

ரப்பர் செருப்பை மாட்டிக் கொண்டு தெருவில் இறங்கி நடக்கத் துவங்கினார் பெரியவர்.

**படுதலம் சுகுமாரன்**

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து மையக்கருத்தைக் கண்டுபிடியுங்கள்.
- பெரியவர் நாராயணனுக்குக் குடும்பத்தாரின் ஒத்துழைப்பு கிடைத்திருந்தால் அவரது சமூகத்தொண்டு எவ்விதமாகச் சிறப்புப் பெற்றிருக்கும்? எழுதுங்கள்.
- பாடப்பாகுதியில் இடம்பெறும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றுங்கள்.
- உங்கள் பள்ளிக்கூடத்திற்குக் குடிநீர் வசதி கேட்டு ஊராட்சித் தலைவருக்கு ஒரு கோரிக்கை மனு தயாரியுங்கள்.
- கீழ்வரும் ஜோடிச்சொற்கள் இணைந்து உருவாகும் சொற்றொடர்களைக் கண்டுபிடியுங்கள்.
    - நலம், சங்கம்
    - நகர், ஆட்சி
    - தட்டி, எழுப்பி
    - கல், எடுத்து
    - காப்பு, அகம்

# பெரிய மனசு

## காட்சி - 1

| | | |
|---|---|---|
| இடம் | : | ஆசிரியர் சிவசங்கரன் வீடு |
| பாத்திரங்கள் | : | ஆசிரியர் சிவசங்கரன், அகிலாண்டம், ஆட்டோ முனுசாமி |
| சிவசங்கரன் | : | அகிலாண்டம்! அகிலாண்டம்! வாடி இங்க! கத்திக் கத்தித் தொண்டையே வத்திப் போச்சு, |
| அகிலாண்டம் | : | ஏன்னா ! எதுக்குக் கத்தறேள்? கை வேலையா இருக்கிறேன்! |
| சிவசங்கரன் | : | வேலை இருக்கட்டும் வேலை! காசையும் பையையும் குடு! நான் மார்க்கட்டுக்குப் போயி காய்கறி வாங்கிட்டு வரேன், ஒக்காந்து ஒக்காந்து போரடிச்சுப் போச்சு, |
| | | (அப்போது ஆட்டோ முனுசாமி வருகிறான்) |
| முனுசாமி | : | ஐயா, கும்பிடுறேனுங்க, அம்மா ! கும்பிடுறேங்க. |
| சிவசங்கரன் | : | என்ன முனுசாமி சவுக்கியமா? |
| முனுசாமி | : | ஐயா! என் பையன் பத்தாவது வகுப்பு பாஸ் பண்ணினது உங்களுக்குத் தெரியுமாய்யா? |
| சிவசங்கரன் | : | நல்லாத் தெரியுமே! உன் மனைவி அம்மாகிட்ட வந்து சொல்லிட்டா! ஐநூறுக்கு நானூத்தி ஐம்பது மார்க் வாங்கி இருக்கான், கெட்டிக்காரன்! தொடர்ந்து படிக்க வை! |



முனுசாமி : ஐயா! அவனெ பதினொண்ணாவது வகுப்பிலே சேக்கறதுக்கு நெறய துட்டு செலவாகும்னு சொல்றாங்கய்யா! என்ன செய்யறதுன்னே தெரியல!

அகிலாண்டம் : முனுசாமி! நீ கவலைப்படாதே! இந்த வருஷம் சரஸ்வதி உண்டியல் உனக்குத் தான்!

முனுசாமி : அது என்னங்க சரஸ்வதி உண்டியல்?

சிவசங்கரன் : முனுசாமி! மாமி கொஞ்சம் வித்தியாசமானவ, இவ சரஸ்வதிக்கு உண்டியல் கட்டி வருஷம் ஒருதரம் அந்தப் பணத்தை எடுத்து படிக்கக் கஷ்டப்படறவங்களுக்குக் கொடுத்து உதவி செய்வா!

அகிலாண்டம் : ஆமாம் முனுசாமி! இன்னிக்குப் பிள்ளைங்களப் படிக்க வைக் கிறதுக்கு அவங்களப் பெத்தவங்க எவ்வளவு கஷ்டப் படறாங்க, அதப் பாக்கும்போது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்குது, அதனால் தான் இப்படி என்னால் முடிஞ்சதச் செய் யறேன்,

சிவசங்கரன் : முனுசாமி ! படிப்பு ஒன்று தான் உண்மையானது, உன் பையன் எவ்வளவு படிக்கறானோ அவ்வளவு படிக்க வை!

அகிலாண்டம் : ஆமாம் முனுசாமி! ஐயா சொன்ன மாதிரிப் படிக்க வை! எங்க செலவுக்குப் போக மிச்சப் பணத்தை உன் பையன் படிப்புக் குக் கொடுக்கிறோம்,

முனுசாமி : அம்மா ! உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு.

அகிலாண்டம் : சரி முனுசாமி! ஐயாவை மார்க்கட்டுக்குக் கூட்டிகிட்டுப் போயி நல்ல காய்கறியா வாங்கிக் குடுத்தனுப்பு, நாளைக்கு வந்து உன் பையன பள்ளிக்கூடத்திலே சேக்கறதுக்குப் பணத்தை வாங்கிக் கிட்டுப் போ!

முனுசாமி : அம்மா! நீங்க நல்லா இருக்கணும்,

(இருவரிடமும் விடைபெற்று ஆட்டோ பக்கம் செல்கிறான்)

## காட்சி - 2

இடம் : சாலை

பாத்திரங்கள் : ஆசிரியர் சிவசங்கரன், முனுசாமி (இருவரும் ஆட்டோவில்)

முனுசாமி : ஐயா! என்னோட ஆட்டோ இருக்குதே, அதில பெரிய சமாச் சாரம் இருக்குது.

சிவசங்கரன் : என்னது ஆட்டோவில் பெரிய சமாச்சாரம்?

முனுசாமி : இதில ஏழையும் ஏறறாங்க, பணக்காரரும் ஏறறாங்க, நல்லவங் களும் ஏறறாங்க...

சிவசங்கரன் : பரவாயில்லயே! ரொம்ப விவரமாப் பேசறியே!

முனுசாமி : (திடுக்கிட்டு) ஐயா! அதோ பாருங்கய்யா! யாரோ அடிபட்டு விழுந்து கிடக்கறாங்க.

சிவசங்கர் : நிறுத்து! நிறுத்து! போயிப் பாப்போம். (இருவரும் இறங் கிப்போய்ப் பார்க்கிறார்கள்)

முனுசாமி : (அடிப்பட்டவரின் மூக்கில் விரலை வைத்துப் பார்த்து) ஐயா! உசிரோடதான் இருக்காரு, வாங்க! ஆசுபத் திரிக்குத் தூக் கிட்டுப் போவோம்.



(இருவரும் ஆட்டோவில் அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு போகிறார்கள். அடி பட்டவரின் பாக்கட்டிலிருந்து அடையாள அட்டையை எடுத்துப் பார்க்கின்றனர். அவர

து பெயர் மாதவன் எனத் தெரிந்துகொள்கின்றனர்)

---

**காட்சி - 3**

---

இடம் : மருத்துவமனை

பாத்திரங்கள் : ஆசிரியர் சிவசங்கரன், முனுசாமி

முனுசாமி : (பரபரப்புடன்) ஐயா! டாக்டரு என்ன சொன்னாரு!

சிவசங்கரன் : முனுசாமி! அவருக்கு ஏகமா ரத்தம் வெளியே போயிடிச்சாம், உடனடியா ரத்தம் குடுத்தாத்தான் அவரக் காப்பாத்த முடியும்.

முனுசாமி : ரத்தம்! நான் குடுக்கறேங்கய்யா, என் ஒடம்பில இருந்து எவ்வளவு ரத்தம் வேணும்னாலும் எடுத்துக்கச் சொல்லுங்க.

சிவசங்கரன் : அப்படியெல்லாம் எடுத்துக்க முடியாது முனுசாமி. மொதல்ல ரத்தம் டெஸ்ட் பண்ணணும், அவரு ஒடம்புக்குப் பொருத்தமா இருந்தாத்தான் அவரு ஒடம்பிலே ஏத்த முடியும், நம்ம ரெண்டு பேரு ரத்தத்தையும் டெஸ்ட் பண்ணுவோம். யாரோட ரத்தம் பொருத்தமா இருக்கோ அவங்க ரத்தம் குடுப்போம்.

முனுசாமி : சரிங்க ஐயா! நீங்க சொன்ன மாதிரியே செஞ்சிடுவோம். (இருவரும் உள்ளே போகிறார்கள்.)

முனுசாமி : ஐயா! கடைசியில உங்க ரத்தம் தான் ஒத்துக்கிச்சு, என்கிட்ட காசா பணமா? ரத்தமாவது குடுத்து ஒத்தாச பண்ணலாம்னு நெனச்சேன்.

சிவசங்கரன் : முனுசாமி! கவலைப்படாதே! அடிபட்டு ஆபத்தில இருக்கிற யாருக்கு வேணும்னாலும் ரத்தம் குடுக்கலாம், ஆஸ்பத்திரியில உன் முகவரியைக் குடுத்திட்டுப் போ! தேவைப்படும்போது கூப்



பிட்டு ரத்தம் எடுத்துக்கு வாங்க.

முனுசாமி : ரொம்ப சந்தோஷங்கய்யா!

சிவசங்கரன் : சரிப்பா வா! அடிபட்டவர் மயக்கம் தெளிஞ்சிருக்கிறாரா பாக்கலாம்.

(இருவரும் உள்ளே போகிறார்கள். அடிபட்டவர் படுக்கையில் சாய்ந்து படுத்திருக்கிறார்)

முனுசாமி : ஐயா! எப்படி இருக்கீங்க?

மாதவன் : நீங்க தான் என்ன இங்க கொண்டு வந்து சேத்தீங்களா? ரொம்ப நன்றி ஐயா!

முனுசாமி : உங்களுக்கு ரத்தம் குடுத்து காப்பாத்தின வாத்தியாரய்யா இவருதான்.

மாதவன் : ஐயா! வாத்தியாரய்யா, உங்களுக்குக் கோடி வணக்கமுங்க! நீங்க ரெண்டு பேரும் மனுஷத் தன்மையோடு என்னைக் காப்பாத்தினீங்களே, நீங்க நல்லா இருக்கணும்.

சிவசங்கரன் : ஐயா! உங்க பாக்கட்ல இருந்த அட்ரசைப் பார்த்து உங்க வீட்டுக்குத் தகவல் சொல்லீட்டேங்க, இப்ப உங்க மனைவியும் மகனும் வந்திருவாங்க.

மாதவன் : நன்றி ஐயா! உங்களுக்கு என்னால் சிரமம் தான்.

சிவசங்கரன் : என்னங்க சிரமம்! ஒருவருக்கொருவர் இந்த உதவியாவது செய்யலேனா நாம் மனிதர்களா? என்ன?

(அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அடிபட்டவரின் மனைவியும் மகனும் வருகின்றனர். சிவசங்கரனும் முனுசாமியும் விடைபெற்றுச் செல்கின்றனர்)

---

**காட்சி - 4**

---

இடம் : ஆசிரியர் சிவசங்கரன் வீடு

பாத்திரங்கள் : சிவசங்கரன், அகிலாண்டம், டேவிட், மாதவன்.

டேவிட் : ஐயா! வணக்கம் ஐயா!

| | | |
|---|---|---|
| சிவசங்கரன் | : | வா டேவிட்! என்ன சவுக்கியமா? அகிலாண்டம்! யாரு வந்திருக்காண்ணு பாரு! |
| அகிலாண்டம் | : | வாப்பா டேவிட்! நல்லாயிருக்கியா? ஐயா ரிட்டயர்டு ஆனதும் எங்களையெல்லாம் மறந்துட்டியா? |
| டேவிட் | : | உங்களை நான் மறந்துட்டா என்ன மாதிரி நன்றி கெட்டவங்க யாருமே இருக்க மாட்டாங்க, ஐயா! கூலி வேல செஞ்சு வயத்தக் கழுவுற என்னப் பெத்தவங்க உங்ககிட்ட கொண்டு என்ன ஒப்படச்சாங்க. ஐயா தான் தேவைப்பட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்துப் படிக்க வச்சாரு. உங்க ஊக்கத்தில ரொம்பக் கஷ்டப்பட்டுப் படிச்சேங்க, எனக்கு மெடிக்கல் சீட் கெடச்சிருக்குங்க ஐயா! |
| சிவசங்கரன் | : | என்னது மெடிக்கல் சீட்டா? வெரி குட்! உன் உழைப்புக்கேத்த ஊதியம் நிச்சயம் கிடைச்சிருக்குப்பா. |
| டேவிட் | : | பீஸ், ஹாஸ்டல், புத்தகம் இதுக்கெல்லாம் இருபத்தஞ்சாயிரம் ரூபாய் தேவைப்படுதுங்கய்யா! அவ்வளவு பணத்துக்கு நான் எங்கய்யா போவேன்! அதனால . . . . . |
| அகிலாண்டம் | : | கடவுள நம்பு டேவிட், அவரு நிச்சயம் கைவிட மாட்டாரு. |
| டேவிட் | : | இவ்வளவு பணத்தைக் கடவுள் எப்படீம்மா குடுப்பாரு? |
| | | (அப்போது மாதவன் வருகிறார்.) |
| மாதவன் | : | (வந்துகொண்டே) வணக்கம் வாத்தியாரய்யா! |
| சிவசங்கரன் | : | வணக்கம்! காயமெல்லாம் ஆறிப்போச்சா? |
| மாதவன் | : | நல்லாயிடுச்சி வாத்தியாரய்யா! எல்லாம் உங்க தயவு. உங்களுக்கு நன்றி சொல்லலாம்னு ஓடிவந்தேன். என் உசிரைக் காப்பாத்தினீங்க! உங்களுக்கு எதுவாச்சும் செய்யணுமே... |



சிவசங்கரன் : எனக்கு எதுனாச்சும் செய்ய நீங்க நெனச்சீங்கன்னா இந்தப் பையனுக்கு உதவி செய்யுங்க!

மாதவன் : என்ன உதவி! சொல்லுங்கய்யா! நான் இப்பவே செய்யறேன். ஆமா ... இந்த பையன் யாருங்க?

சிவசங்கரன் : இந்த பையன் பேரு டேவிட், என்னுடைய மாணவன், டாக்டர் படிப்புக்கு செலக்ட் ஆகியிருக்கான், பீஸ் அது இதுன்னு ஒரு இருபத்தஞ்சாயிரம் கட்டணுமாம்.

மாதவன் : இருபத்தஞ்சாயிரம் தானா? இது நமக்குப் பெரிய தொகையேயில்லை, ஊருக்கு உழைக்கணும்னு நினைக்கிற உங்கள் ரத்தம் என் உடம்பிலே ஓடுது, அந்த ரத்தம் உதவி செய்யச் சொல்லுது! உதவி செய்யறேங்கய்யா! உதவி செய்ய றேன்! இந்தப் பையன் படிக்கிற வரைக்கும் வருஷா வருஷம் பணம் கொடுக்கிறேன், போதுமா?

சிவசங்கரன் : சரிங்க! ரொம்ப நன்றி.

அகிலாண்டம் : பாத்தியா டேவிட்! தெய்வம் மனுஷா வடிவத்திலே வரும்னு சொன்னேனே! சரியாப் போயிடுச்சா?

டேவிட் : ஐயா! உங்க உதவிக்கு ரொம்ப நன்றி ஐயா!

**(திரை)**

## செயல்பாடுகள்

- 'பெரிய மனசு' என்னும் தலைப்பு இந்த நாடகத்திற்குப் பொருத்தமானதா? வாசித்துக் கண்டுபிடியுங்கள்.
- நாடகத்தில் உங்களைக் கவர்ந்த கதைமாந்தர் யார்? ஏன்? காரணங்களை எழுதுங்கள்.
- அடிபட்டவருக்கு ஆசிரியர் இரத்ததானம் செய்கிறார். வேறு என்னென்ன தானங்கள் செய்யலாம்? இதனால் சமூகத்திற்குக் கிடைக்கும் பயன்கள் யாவை?
- தனி மனிதனின் உதவிகள் சமூகத்தை எவ்வாறு மேம்படுத்தும்? விவாதித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- நாடகத்தைக் கதை வடிவில் மாற்றுங்கள்.
- குழுவாகப் பிரிந்து நாடகத்தை வகுப்பில் நடித்துக்காட்டுங்கள்.

## நான் தெரிந்துகொண்டவை

- நீங்கள் பள்ளிக்குப் போகும் வழியில் ஒருவர் வாகனம் மோதியதால் கீழே விழுந்து கிடக்கிறார். அவருக்கு நீ எவ்வாறெல்லாம் உதவுவாய்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

- நாராயணனைப் போன்றவர்களின் சேவை சமூகத்திற்குத் தேவையா? ஏன்? உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................